36. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ______ நாட்டைச் சேர்ந்தவர்.

(1) போர்ச்சுக்கல் (2) ஸ்பெயின் (3) இங்கிலாந்து (4) பிரான்ஸ்

37. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை ______.

(1) வில்லியம் கோட்டை (2) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

(3) ஆக்ரா கோட்டை (4) டேவிட் கோட்டை

38. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர் ______.

(1) ஆங்கிலேயர்கள் (2) பிரெஞ்சுக்காரர்கள்

(3) டேனியர்கள் (4) போர்த்துக்கீசியர்கள்

39. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ______ வர்த்தக மையமாக இருந்தது.

(1) போர்ச்சுக்கீசியர்கள் (2) ஆங்கிலேயர்கள்

(3) பிரெஞ்சுக்காரர்கள் (4) டேனியர்கள்

40. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) ______ல் அமைந்துள்ளது.

(1) புதுடெல்லி (2) கல்கத்தா (3) சென்னை (4) மும்பை

41. கூற்றுகளை ஆராய்க.

கூற்று: போர்ச்சுகீசிய மாலுமி பார்த்தலோமியோ டயஸ், இரண்டாம் ஜான் என்பவரால் ஆதரிக்கப்பட்டார்.

காரணம்: போர்ச்சுகீசியர்கள் இந்தியாவிற்குக் கடல் வழி காண்பதில் ஆர்வமுடையவர்கள்.

(1) கூற்றும், காரணமும் தவறு (2) கூற்றும், காரணமும் சரி

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

LIVEWORKSHEETS

42. இந்தியாவில் அச்சு இயந்திரம் ______ல் ______ அரசால் ______ எனும் இடத்தில் நிறுவப்பட்டது.

(1) 1556, போர்ச்சுக்கீசிய, கோவா
(2) 1556, டேனிய, டெல்லி
(3) 1565, டச்சு, பழவேற்காடு
(4) 1556, போர்ச்சுக்கீசிய, டையூ

43. கூற்று: 1608 ல் ஜஹாங்கீர் அவைக்கு, வர்த்தக அனுமதி கோரி வில்லியம் ஹாக்கின்ஸ் வந்தார். ஆனால், ஜஹாங்கீர் அதை நிராகரித்தார்.

காரணம்: ______________.

(1) ஆங்கிலேயர் மீது வெறுப்பு
(2) போர்ச்சுக்கீசிய தலையீடு
(3) ஆங்கிலேயர் மீது அச்சம்
(4) பணிவற்ற அணுகுமுறையால்

44. பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் ______ ஆண்டு ______ கிழக்கிந்தியக் கம்பெனி உருவாக்கப்பட்டது.

(1) 1664, டச்சு (2) 1664, ஆங்கில (3) 1646, சுவீடன் (4) 1664, பிரெஞ்சு

45. டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கியவர் ______.

(1) நான்காம் கிறிஸ்டியன்
(2) சீகன் பால்கு
(3) தாமஸ்
(4) பெட்ரோ காப்ரல்

46. தவறான இணையைக் கண்டறிக.

(1) பிரான்சிஸ் டே - டென்மார்க்
(2) பெட்ரோ காப்ரல் - போர்ச்சுகல்
(3) ஹாக்கின்ஸ் - இங்கிலாந்து
(4) கால்பர்ட் - பிரான்ஸ்

47. பொருத்துக.

i. டச்சுக்காரர்கள் - 1. 1664
ii. ஆங்கிலேயர்கள் - 2. 1602
iii. டேனியர்கள் - 3. 1600

LIVEWORKSHEETS

iv. பிரெஞ்சுக்காரர்கள் - 4. 1616

| | i | ii | iii | iv | | i | ii | iii | iv |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 1 | 2 | 4 | 3 | (2) | 2 | 3 | 1 | 4 |
| (3) | 2 | 3 | 4 | 1 | (4) | 2 | 1 | 4 | 3 |

48. ஐரோப்பியர்களின் வருகை இந்திய வரலாற்றில் _______ காலத்தைச் சார்ந்தது.

(1) பண்டைய காலம் (2) இடைக்காலம்

(3) நவீன காலம் (4) சமகாலம்

49. இந்தியாவின் நவீன கால வரலாறு _______ ம் நூற்றாண்டில் தொடங்குகிறது.

(1) கி.பி. 14 (2) கி.பி. 18 (3) கி.பி. 20 (4) கி.பி. 16

50. வரலாறு _______ அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகிறது.

(1) காலத்தை (2) புத்தகத்தை

(3) ஆதாரங்களை (4) வரலாற்றாசிரியரை

51. _______ இந்திய வரலாறு எழுதும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினர்.

(1) பாரசீகர்கள் (2) ஆங்கிலேயர்கள்

(3) கிரேக்கர்கள் (4) டேனியர்கள்

52. இந்தியாவின் நிருவாகப் பதிவுகள் பாதுகாக்கப்படும் இடம் _______.

(1) அருங்காட்சியகம் (2) புனித ஜார்ஜ் கோட்டை

(3) ஆவணக் காப்பகம் (4) ஆட்சியர் அலுவலகம்

53. பொருந்தாததைக் கண்டுபிடி.

(1) இலக்கியம் (2) சுயசரிதை (3) அரசு ஆவணம் (4) நாணயம்

54. பொருந்தாததைக் கண்டுபிடி.

(1) ஓவியங்கள் (2) கோட்டைகள் (3) நாட்குறிப்பு (4) சிலைகள்

55. பொருந்தாததைக் கண்டுபிடி.

LIVEWORKSHEETS

(1) டேனியர் (2) இத்தாலியர் (3) ஆங்கிலேயர் (4) பிரெஞ்சுக்காரர்

56. சென்னை நாட்குறிப்புப் பதிவை வெளியிட்டவர் ______.

(1) டாட்வெல் (2) ஜார்ஜ் (3) ஆனந்த ரங்கம் (4) சென்னப்ப நாயக்கர்

57. நிகழ்வுகளை வரிசைப்படுத்துக.

a) தாமஸ் பெஸ்ட் போர்ச்சுகீசியக் கடற்படையைத் தோற்கடித்தார்.

b) ராணி எலிசபெத் வணிக அனுமதி பட்டயம் வழங்கினார்.

c) ஜஹாங்கீர் கி. பி 1613 ல் சூரத்தில் வணிகம் செய்ய அனுமதி வழங்கினார்.

d) ஜஹாங்கீரிடம் மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் அனுமதி கோரினார். ஆனால், அனுமதி கிடைக்கவில்லை.

(1) a - c - b - d (2) b - d - a - c (3) b - d - c - a (4) b - a - c - d

58. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ______ என்றும் அழைக்கப்படுகிறது.

(1) இந்திய ஆவணக் காப்பகம் (2) தமிழ்க் காப்பகம்

(3) சென்னை பதிவாளர் அலுவலகம் (4) தலைமைச் செயலகம்

59. பொருத்துக.

| | | |
|---|---|---|
| i. ஆங்கிலேயரின் முதல் வணிக மையம் | - | 1. ஜமீன்தாரி உரிமை |
| ii. மெட்ராஸ் | - | 2. மசூலிப்பட்டினம் |
| iii. பம்பாய் | - | 3. குத்தகை |
| iv. கல்கத்தா | - | 4. திருமண சீர் |

| | i | ii | iii | iv | | i | ii | iii | iv |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 2 | 3 | 4 | 1 | (2) | 2 | 4 | 3 | 1 |
| (3) | 2 | 3 | 1 | 4 | (4) | 2 | 1 | 3 | 4 |

60. நவீன இந்தியாவின் முதன்மை ஆதாரங்கள் ______ மற்றும் ______.

(1) ஓவியங்கள், கோட்டைகள் (2) ஓவியங்கள், சிலைகள்

(3) சிலைகள், கோட்டைகள் (4) சிலைகள், நாணயங்கள்

LIVEWORKSHEETS

61. தமிழ் வரலாற்றுக் குறிப்பு ஆவணங்களில் முக்கியமாக இருக்க வேண்டிய பெயர் _______.

(1) ஆனந்த ரங்கம் (2) டாட்வெல் (3) ஜார்ஜ் (4) அல்புகர்க்

62. தமிழ்நாடு ஆவணக் காப்பத்தின் பெரும்பாலான ஆவணங்கள் _______ மொழியில் உள்ளன.

(1) தமிழ் (2) ஆங்கிலம் (3) இந்தி (4) உருது

63. கூற்றுகளை ஆராய்க.

கூற்று 1: தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1642 ஆம் ஆண்டு டச்சுப் பதிவுகளின் தொகுப்புகள் உள்ளன.

கூற்று 2: இப்பதிவுகள் கொச்சி மற்றும் சோழமண்டலக் கடற்கரையிலுள்ள இடங்களுடன் தொடர்புடையன.

(1) கூற்று 1, 2 ம் சரி (2) கூற்று 1, 2 ம் தவறு

(3) கூற்று 1 சரி, 2 தவறு (4) கூற்று 1 தவறு, 2 சரி

64. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தோடு தொடர்புடைய கூற்றுகளில் எது தவறானது?

(1) தென்னிந்தியாவின் மிகப்பழமையான பெரிய ஆவணக் காப்பகம்.

(2) டச்சுப் பதிவுகளின் தொகுப்புகள் - 1642.

(3) டேனிஷ் பதிவுகள் - 1687 முதல் 1845 காலப்பகுதி வரை.

(4) கொச்சி மற்றும் சோழமண்டலப் பதிவுகள் - 1657 முதல் 1845 காலப்பகுதி.

65. பொருத்துக.

i. புனித டேவிட் கோட்டை - 1. பிரெஞ்சுக்காரர்கள்

ii. கெல்டிரியா கோட்டை - 2. டேனியர்கள்

iii. தரங்கம்பாடி - 3. டச்சுக்காரர்கள்

iv. செயின்ட் லூயிஸ் கோட்டை - 4. ஆங்கிலேயர்கள்

| | i | ii | iii | iv | | i | ii | iii | iv |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 4 | 3 | 2 | 1 | (2) | 4 | 3 | 1 | 2 |

LIVEWORKSHEETS

(3) 4 2 3 1 (4) 4 1 2 3

66. 1500-ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டைக்கு வந்த இரண்டாவது போர்ச்சுக்கீசிய மாலுமி _______.

(1) வாஸ்கோடகாமா (2) பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல்

(3) சாமரின் (4) பார்த்தலோமியோ டயஸ்

67. போர்ச்சுகீசியரின் முதல் தலைநகர் _______.

(1) கோவா (2) டையூ (3) கொச்சின் (4) டாமன்

68. டச்சுக்காரர்களின் ஆரம்ப காலத் தலைநகர் _______.

(1) பழவேற்காடு (2) நாகப்பட்டினம் (3) சூரத் (4) பாட்னா

69. டச்சுக்காரர்கள் தங்கள் தலைநகரை 1690 இல் _______ லிருந்து _______ க்கு மாற்றினர்.

(1) பழவேற்காடு, சூரத் (2) பழவேற்காடு, நாகப்பட்டினம்

(3) நாகப்பட்டினம், பழவேற்காடு (4) சூரத், பாட்னா

70. கூற்றுகளை ஆராய்க.

கூற்று: அல்மெய்டா பின்பற்றிய கொள்கை நீலநீர்க் கொள்கை என அழைக்கப்பட்டது.

காரணம்: இந்தியாவில் அவர் போர்ச்சுகீசியக் கப்பற்படையைப் பலப்படுத்தினார்.

(1) கூற்றும், காரணமும் சரி (2) கூற்றும், காரணமும் தவறு

(3) கூற்று சரி, காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

LIVEWORKSHEETS